சொன்னதை அந்த மாவட்ட உறுப்பினர் என்ற முறையில் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது எப்போது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பக்கத்தில் இருக்கிற திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினருடைய மனக் குறையை சம்பாதித்துக் கொள்ளாமல், திரு. கிட்டப்பா அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க தனியாக ஒரு பிரிவை அமைக்க அரசு யோசனை செய்யும்.

செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஒன்றியங்களில் வளர்ச்சிப் பணிகள்.

*வினா எண் 90—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளை ஏனைய ஊராட்சி ஒன்றியங்கள் போல ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி திட்டம் அல்லது சிறு-விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 2-10-80 முதல் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வத்தலக்குண்டு ஒன்றியத்தில் சாலைப் பணிகள்.

*வினா எண் 91—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி வத்தலக்குண்டு யூனியன் ராமநாயக்கன்பட்டி—ரெங்கப்பநாயக்கன்பட்டியை இணைத்து வைகையின் குறுக்கே பாலம் அமைத்து புள்ளிமான்கோம்பை வழியாக ஆண்டிப்பட்டிக்கு சாலை அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.